**தலைப்பு 193 - தொழில் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொழில் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, இந்த நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான

பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) கீழே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்குவதாக, நிதி நிலைமைக் கூற்றின் முன்னைய வருடத்தின் இறுதி மீதிகள் இந்த வருடத்தில் ஒப்பிடுவதற்காக முன்வைக்கும் போது கடந்த வருடத்தில் காணப்பட்ட மீதிகளுக்கு, தேசிய உற்பத்திறன் செயலகத்தில் ஆண்டினுள் சுவீகரிக்கப்பட்ட மீதிகள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு உரியதாக என்னால் முன்வைக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி மற்றும் செயலாற்றல் கூற்று

#### 1.6.1.1 வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அமைச்சிற்காக தலைப்பு இலக்கம் 193 மற்றும் 054 இன் கீழ் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதி ரூபா 597,229,588 ஆக காண்பிக்கப்பட்டிருந்த | நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கை மற்றும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்புகளுக்கடையே கட்டுநிதி பெறுவனவுகளில் ரூபா 824,412ஆன வேறுபாடொன்று காணப்படுவதாக | நிதிச் செயலாற்றல் கூற்றில் அனைத்து கட்டுநிதி பெறுவனவுகளும் கூட்டிக் காண்பிக்கப்பட வேண்டியதுடன், தீர்க்கப்படடாத கட்டுநிதிகள் கழித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், திறைசேரியின் அச்சீட்டுக்கமைய இந்த பெறுவனவுகள் ரூபா 598,054,000 ஆக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம், நிதி மற்றும் செயலாற்றல் அறிக்கை மற்றும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்புகளுக்கடையே கட்டுநிதி பெறுவனவுகளில் ரூபா 824,412ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், உண்மையாக தயாரிக்கப்பட்ட அறிக்கைகளை பரிசோதிக்கும் போது ரூபா 131,273.55 ஆன வேறுபாடொன்று காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டது. இந்த வேறுபாடு ரூபா 131,273.55 வரை குறைவடைவதற்கான காரணமாக அமைந்தது வெளிநாட்டு அலுவல்கள;/ திறன்கள் அபிவிருத்தி அமைச்சிற்காக விடுவிக்கப்பட்ட பெறுமதி கணக்காய்வாளர்களால் ரூபா 850,591,194 ஆகவும், திறைசேரிக்கான தீர்ப்பனவுகள் ரூபா 30,600,806 ஆகவும் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த சரியான பெறுமதிகள் முறையே ரூபா 882,392,000 மற்றும் ரூபா 31,293,944 ஆக வேண்டும் . | காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி செயலாற்றல் கூற்று மற்றும் திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்புகளுக்கடையே வைப்புப் பெறுவனவுகள மற்றும் செலுத்தல்கள் ஆகியவற்றில் முறையே ரூபா 174,605 மற்றும் ரூபா 324,726 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | அந்த வேறுபாட்டுக்கு காரணமாக அமைவது தேசிய உற்றத்தித்திறன் செயலகம், பொது நிர்வாக அமைச்சு தலைப்பு இலக்கம் 130 இன் கீழ் செயற்பட்ட காலப்பகுதிக்குரிய 6000-13-045 மற்றும் 6000-18-033 ஆம் இலக்கமுடைய வைப்புக் கணக்குகளின் ஊடாக கணக்கு வைக்கப்பட்ட பெறுமதி தொடர்பில் கவனம் செலுத்தாது கணக்காய்வு அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளமை யால் ஆகும். | மீதிகளை சுவீகரித்தல் கணக்கு வைக்கப்படும் போது பாதீட்டு சுற்றறிக்கைகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2020 நவம்பர் 30ஆந் திகதிய பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 06/2020 இன் 14ஆம் பந்திக்கமைய அமைச்சிற்குரிய பணிகளின ஒரு பகுதி மாத்திரம் வேறு அமைச்சிற்கு சாட்டுதல் செய்யும் சந்தர்ப்பத்தில் பரிமாற்றப்படும் பதவியணியை கருத்திற்கொண்டு கடன் மீதிகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பிரகாரம், 2020 செப்தம்பர் 01ஆந் திகதி தொழில் அமைச்சிற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த செயற்திறன் செயலகத்தின் முற்பண பீ கணக்கின் ஆரம்ப மீதியான ரூபா 40,851,695 தொகை முற்பண செலுத்தலாக கடன் மீதிகள் மாற்றப்பட்டு சரியாக நிதிச் செயலற்றல் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிச் செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டது காலப்பகுதிக்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் மாத்திரம் என்பதால் ஆரம்ப மீதியில் சுவீகரித்தல் நிதிச் செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்படாமை கணக்காய்வினால் இனங்காணப்பட்ட ரூபா 37,871,056 ஆன வேறுபாட்டுக்கு காரணமாக அமைந்தது அவ்வாறு ஆரம்ப மீதியாக இனங்காணப்பட்ட நிலைமை என்பதனையும் மேலும் சுட்டிக்காண்பிக்கின்றேன். | - மேற்படி - |
| (ஈ) | திறைசேரியின் இறுதி அச்சீட்டுக் குறிப்புகளுடன் இணக்கம் செய்யும் போது கணக்கு அறிக்கைகளில் மற்றம் ஏ.சீ.ஏ-5 அறிக்கையின் முற்பணப் பெறுவனவு மற்றும் செலுத்தல்கள் ரூபா 2,980,639 படியாக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | திறைசேரிக் குறிப்புகளுக்கமைய தலைப்பு 054 இன் கீழ் நிலவிய காலப்பகுதியில் அதாவது, 2020 சனவரி மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலும் தொழில் அமைச்சின் 54-11 இன் கீழ் குறுக்குப் பதிவுகளின் ஊடாக செலவு வைக்கப்பட்ட ரூபா 1,478,052.19 பெறுமதியில் மற்றும் 54-12 இன் கீழ் குறுக்குப் பதிவுகளின் ஊடாக செலவு வைக்கப்பட்ட ரூபா 666,327 பெறுமதியில, தொழில் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு உரியதாக 54-11 இன் கீழ் காசாக செலவு வைக்கப்பட்ட ரூபா 835,810 ஆன பெறுமதிகள் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | மூன்றின் கூட்டுத்தொகை கணக்காய்வு அவதானிப்பில் வேறுபாடொன்று காணப்படுவதாக சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள இந்த பெறுமதி உருவாகியுள்ளது. அதன் பிரகாரம், அது வேறுபாடு அல்ல என்பதை சுட்டிக்காண்பிக்கின்றேன். | |

**1.6.2 நிதி திலைமைக் கூற்று**

**1.6.2.1 நிதியல்லாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையான சொத்துக்களில் 2020 சனவரி 01ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 491,612,257 ஆக வேண்டிய போதிலும், 2020 இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆரம்ப மீதி ரூபா 575,878,787 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 84,266,530 ஆல் ஆரம்ப மீதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 84,266,530 ஆன ஆரம்ப மீதியில் காணப்படும் வேறுபாடு தொழில் அமைச்சிற்க சுவீகரிக்கப்டப்ட தேசிய செயற்திறன் செயலகத்தின் 2020 சனவரி 01ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட மீதியாகும் அந்த தொகையில் ரூபா 55,365,211 ஆன தொகை மாத்திரம் பொது நிர்வாக அமைச்சிற்கு சாட்டப்பட்டுள்ளதுடன், அதன் எஞ்சிய தொகை 2021ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ஆண்டினுள்ளான சுவீகரிப்புகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் ஏ.சீ.ஏ-6 மாதிரியில் காண்பிக்கப்பட்டிருந்த நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்று மற்றும் திறைசேரியின் குறிப்புகள (SA-80) ஆகியவற்றுக்கிடையே நிதியல்லாத சொத்துக்களில் ரூபா 18,973,067 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றில் உள்ள நிதியல்லா சொத்துக்களின் பெறுமதி ரூபா 18,973,067 ஆன வேறுபாடொன்று காணப்படுவதாக கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. செயற்திறன் செயலகத்தின் நிதியல்லா சொத்துக்களின் மீதியான ரூபா 84,286,529.75 பெறுமதியில் ரூபா 55,305,211 ஆன பகுதி மாத்திரம் பொது நிர்வாக அமைச்சின் ஊடாக தலைப்பு 130 இல் இருந்து அமைச்சின் தலைப்பான தலைப்பு 193 இற்கு 2021 பெப்ரவரி 28ஆந் திகதி சாட்டப்பட்டுள்ள போதிலும், எஞ்சிய பெறுமதியை தீர்ப்பனவு செய்ய வேண்டியமையால் அதனை 2021ஆம் அண்டின் போது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் வழிகாட்டில்களுக்கமைய மற்றும் திறைசேரியின் கணக்குகளுக்கமைய இயலுமான அளவில் சரியானதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி ரூபா 582,687,237 ஆக காணப்பட்ட போதிலும், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக திறைசேரிக்கமைய அந்த மீதி (SA-80) ரூபா 563,714,170 ஆகும். அதன் பிரகாரம் அந்த கூற்றுக்களுக்கிடையே நிதியல்லாத சொத்துக்களில் ரூபா 18,973,067 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2.2 நிதிச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020இன் வழிகாட்டி இலக்கம் 6, 7(v) இன் பிராகரம் நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்கள் மற்றும் மூலதனத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய சொத்துக்களின் மீதியானது அமைச்சின் முற்பணக் கணக்கின் பெறுமதியிலிருந்து வைப்புக் கணக்குகளின் பெறுமதியை கழித்த பின்னர் பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பிராகரம், ரூபா 39,049,635 தொகை தேறிய சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 38,779,611 ஆக காணப்பட்டதுடன், வேறுபாடு ரூபா 270,024 ஆகும். | இந்த பெறுமதி வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 2020ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற தேர்தல் கடமைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை தீர்ப்பதற்கான கட்டுநிதி பெறுமதியாகும். இந்த தொகை 2021ஆம் ஆண்டின் சனவரி மாதம் திறைசேரியினால் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டல்களுக்கமைய மற்றும் திறைசேரியின் கணக்குகளுக்கு இணங்கும் வகையில் இயலுமான அளவில் சரியானதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 18,973,067 கூடுதலாக காண்பிக்கப்பட்டமையால் நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்களின் கீழ் ஆதனங்கள், பொறிகள் மற்றம் உபகரணங்கள் தொகுதியும் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தொகுதியின் பெறுமதி ரூபா 18,973,067 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுக்கொள்வதுடன், அதற்கு காரணமாக அமைவது, பொது நிர்வாக அமைச்சிடம் தீர்ப்பனவு செய்ய வேண்டிய பணத்தின் எஞ்சிய தொகை ஆகும். எவ்வாறான போதிலும், 2021 ஆம் ஆண்டின் போது அந்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தொடர்ந்தும் தெரிவித்துக்கொள்கின்றேன். | -மேற்படி- |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

---

### 1.6.3.1 செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டினுள் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொண்ட கட்டுநிதியின் அளவான ரூபா 628,654,806 தொகை கட்டுநிதிப் பெறுவனவாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கட்டுநிதி பெறுவனவாக ரூபா 628,523,532 காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 131,274 இனால் குறைவாக கட்டுநிதிப் பெறுவனவு காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஆண்டினுள் திறைசேரியிலிருந்து கிடைத்த கட்டுநிதியின் அளவும், காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டிய கட்டுநிதிப் பெறுவனவாக குறிப்பிடப்பட்ட பெறுமதிகளுக்கிடையே ரூபா 131,274 ஆன வேறுபாடொன்று காணப்படுவதாக கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக்கொள்கின்றே போதிலும், மேலே குறிப்பிட்ட 1.5.1.1 (அ) இன் கீழ் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதிப் பெறுவனவுகளில் ரூபா 824,412 ஆன வேறுபாடொன்று காணப்பட்டதுடன், கணக்காய்வு அவதானிப்பிலிருந்து வேறுபட்டு காணப்படுகின்றமையும், அந்த வேறுபாட்டுக்கான காரணமாக 2020 யூலை 05ஆந் திகதி காசோலை இலக்கம் 017892 மூலம் மீளளிப்புச் செய்யப்பட்ட தேர்தல் கடமைகளுக்கான செலவினமான ரூபா 693,138 ஆகும். | அரச கணக்குகள் சுற்றறிக்கைகளுக்கு இணங்கவும் திறைசேரிக் கணக்குகளுக்கு இணங்கவும் இயலுமான அளவிற்கு நிதிக்கூற்றுக்களை சரியானதாக தயாரிக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆண்டுக்காக தலைப்பு இலக்கம் 054 மற்றும் தலைப்பு 193 இன் கீழ் அமைச்சினால் மேற்கொள்ளப்படும் ஆளணி வேதனங்கள், செயற்பாட்டு செலவினம் மற்றும் உதவு தொகைகளுக்கான மாற்றல்களாக ரூபா 623,295,556 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பரீட்சை மீதி மற்றும் ஏசீஏ-2(ii) செலவினக் கூற்றின் பிரகாரம் இந்த செலவினம் ரூபா 621,217,511 ஆகும். அதன் பிரகாரம் பரீட்சை மீதி மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுக்கிடையே ஆளணி வேதனங்கள், செயற்பாட்டு செலவினம் மற்றம் உதவுதொகை மற்றும் மாற்றல்களில் ரூபா 2,078,045 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டுக்கு காரணமாவது மூலதனச் செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய செலவினங்கள் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காசுப்பாய்ச்சல் கூற்றில் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருந்தமை ஆகும். எதிர்காலத்தில் இந்த மூலதனத் தன்மையிலான செலவினங்களை ஒவ்வொரு உப தலைப்பின் கீழ் சரியாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**1.6.3.2 முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல்**

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ஆகியவற்றுக்காக ஆண்டினுள் செலவிடப்பட்ட தொகையான ரூபா 6,788,450 காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதனுள் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்திலிருந்து | காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படும் பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ஆகியவற்றுக்காக ஆண்டினுள் செலவிடப்பட்ட தொகையான ரூபா 6,788,450 பெறுமதி, ACA-6 மாதிரியில் முன்வைக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று – 2020 இல் இயந்திர் உபகரணங்கள் 6112 குறியீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளில் பின்வருமாறு உருவாகியுள்ளது. | ஆண்டினுள் செலவிடப்பட்ட பணம் மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் செலவுகளில் உள்ளடக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியான ரூபா 5,429,776 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், தலைப்பு இலக்கம் 054 மற்றும் 193 பரீட்சை மீதிக்கமைய அந்த செலவினங்கள் ரூபா 2,078,047 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 4,710,403ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | **கைப்பற்றல்கள்** | **குறியீடு** | **பெறுமதி (ரூபா)** |
| | போக்குவரத்து உபகரணங்கள் | 61121 | 3,700,000 |
| | ஏனைய இயந்திரங்கள் (1,729,776 – 1,576,117) | 61122 | 3,305,893 |
| | | | 7,005,893 |
| | **கைத்தவிர்ப்புகள்** | | |
| | ஏனைய இயந்திரங்கள் | 61122 | (217,443) |
| | **தேறிய பெறுமதி** | | **6,788,450** |

### 1.6.4 கட்டுநிதிக் கணக்கு மீதி

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஏ.சீ.ஏ – 3 கூற்றுக்கமைய வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட தேறிய கட்டு நிதியின் அளவு ரூபா 61,630,129 ஆன போதிலும் அதன் சரியான மீதி ரூபா 61,498,856 ஆனமையால் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 131,274 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ஏ.சீ.ஏ–3 கூற்றின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் கீழுள்ள உப கட்டுநிதி மீதியின் கீழ் தொழில் அமைச்சிற்கு உரிய மீதியாக ரூபா 270,024 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் சரியான கணிப்பீட்டிற்கமைய அந்த மீதி ரூபா 138,750 ஆக வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது. | இந்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தீர்க்கப்பட வேண்டிய தேர்தல் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கான கட்டுநிதி ஆகும். 2021 ஜனவரி மாதம் இந்த பெறுமதி திரைசேரியினால் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கு அறிக்கைகளை தயாரிக்கும் போது சரியான கணிப்பீடுகளை உள்ளடக்கி இயலுமானளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டியமை. |

**1.6.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020ஆம் ஆண்டினுள் அமைச்சரவை கட்டமைப்பில் மற்றும் உள்ளடக்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றமடைந்தமைக்கமைய 2020 நவம்பர் 30ஆந் திகதிய 06/2020ஆம் இலக்க நிதி அமைச்சின் பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 சனவரி 01ஆந் திகதி முதல் 2020 ஆகஸ்ட் 31 வரையான காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செலவினம், சீராக்கம், முற்பண கடன் மீதிகளை மாற்றுதல், வைப்பு மீதிகளை மாற்றுதல், நிதியல்லாத சொத்துக்களை சாட்டுதல் போன்ற பேராட்டு குறிப்புகளின் ஊடாக மாற்றப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அமைச்சினால் 2020 செப்தம்பர் 01 முதல் தொழில் அமைச்சிற்கு சேர்ந்த மற்றும் அகற்றிய நிறுவனங்களின் மீதிகளை ஒப்படைப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு உரிய பேரேட்டுக் குறிப்புகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த மீதிகளை சாட்டுதல் செய்யும் போது பேரேட்டுக்குறிப்புக்களின் ஊடாக மேற்கொள்ளப்படவில்லை என்பதும் 054 தலைப்பிலிருந்து 193 தலைப்பிற்கு மீதிகளை மாற்றுதல் CIGAS மென்பொருள் ஊடாக மேற்கொள்ளப்பட்மையும், அதற்காக தயாரிக்கப்பட்ட 02 கணக்கு பொழிப்பு கோவைகள் தயாரிக்கப்பட்டுள்ளமை யையும் தெரிவித்துக்கொள்கின்றேன். | 2020 நவம்பர் 30ஆந் திகதிய 06/2020ஆம் இலக்க நிதி அமைச்சின் பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 செலவின முகாமைத்துவம்

---

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 7 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்படடிருந்த ரூபா. 13,850,000 நிதியில் ரூபா. 6,875,341 எஞ்சியிருந்தது. அது 16 சதவீதம் தொடக்கம் 100 சதவீதமான வீச்சு காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் -19 தொற்று நோய் நிலை காரணமாக நாட்டில் ஏற்பட்ட நிலையும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்கு முடியாமை இதற்கு காரணமாகும். விசேடமாக அதன் கீழ் உள்ள செயல்களை நிறைவேற்றுவதற்கு உகந்த சூழல் நாட்டினுள் இல்லை என்பதும் ஊரடங்கு நட்டம் அமுல்படுத்தல் மற்றும் நாட்டை முற்றாக மூடுதல் போன்றவற்றால் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாது இருந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகின்றேன். அவ்வாறான சவாலான சூழ்நிலையின் மத்தியில் திருப்திகரமான முன்னேற்றத்தினைக் கைப்பற்றிக் கொள்ள முடிந்துள்ளமை நாம் பெற்றுக் கொண்ட வெற்றி என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவு மதிப்பீடானது முடிந்த வரையில் தர்க்க ரீதியில், மற்றும் சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 22 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 134,724,000 நிதியில் ரூபா. 24,921,437 அதாவது 18.5 சதவீதம் செலவு விடயங்களில் எஞ்சியிருந்தது. அது 13 சதவீதம் தொடக்கம் 100 சதவீத் வரையான வீச்சில் அந்த மீதி காணப்பட்டது. | -மேற்படி- | -மேற்படி- |

**2.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் ஏற்படுத்தப்படல்**

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 ஆம் திகதியிலான நிதிக்கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்த பொறுப்புக்கள் திறைசேரி குறிப்புகளில் (SA-92) குறிப்பிடப்பட்டிருந்த பொறுப்புக்களை விட ரூபா.969,410 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பொறுப்புக்களை CIGAS கணணி மென்பொருளில் உட்சேர்ப்பதற்கு வழங்கப்பட்டிருந்த இறுதித் திகதி 2021 ஜனவரி மாதம் 21 ஆம் திகதி வரையிலும் மட்டுமே என்பதனால் அதன் பின்னர் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கிடைக்கப் பெற்று நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியான 2021 பெப்ரவரி 28 வரையான காலப்பகுதியில் உள்ளடக்கப்பட்ட பொறுப்புகளும் பொறுப்புகள் ஏட்டில் உள்ளடக்கப்பட்டமையே இதற்குக் காரணம் ஆகும். | அமைச்சினால் ஒவ்வொரு நிதி ஆண்டு இறுதியிலும் தீர்ப்பதற்கு உள்ள பொறுப்புக்களின் சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். |
| (ஆ) 2020 ஒகஸ்ட் 28 ஆம் திகதி இலக்கம் 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிகாட்டல் அலக்கம் 06 இல் 3.4 இன் பிரகாரம் திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடமை | மேலே (அ) இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு இந்த அனைத்துப் பொறுப்புக்களுக்கும் உரிய கொடுப்பனவு செய்வதற்காக உட்சேர்த்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் 2021 ஜனவரி மாதம் 21 | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | அல்லது பொறுப்பு 2021 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட வேண்டியதில்லை. எனினும், திறைசேரியில் அறிக்கையிடப்படாத 17 சந்தர்ப்பங்களுக்கு உரிய ரூபா.706,983 ஆன பொறுப்புக்களை 2021 ஆம் ஆண்டினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் திறைசேரியில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 91,501 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஆம் திகதியில் அதாவது CIGAS கணணி மென்பொருள் மூலம் உட்சேர்ப்பதற்கு அனுமதி கிடைக்காமையினால் பின்னர் கிடைக்கப் பெற்ற பணவுறுதிப் பத்திரங்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டமையாகும். தோழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகத்திற்கு உரிய அதன் ரூபா. 91,501 பெறுமதி நிதிக்கூற்றுகளில் கைவிடப்பட்டு இருந்தது அந்த நிறுவனத்திற்கு இவ்வகையான நிலைமை எதிர் காலத்தில் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ரூபா. 18,497 பெறுமதியான பொறுப்புக்கள், அமைச்சின் பொறுப்புக்கள் ஏட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதிக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அந்த ரூபா. 18,497 பெறுமதிக்கு உரிய பொறுப்புக்கள் நிதிக் கூற்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும், 2020 ஆம் ஆண்டிற்கு உரிய பொறுப்பக்களாக முன்கூட்டியே அறிந்து கொண்டதுடன் (கணக்கு தயாரிக்கும் திகதியில்) பொறுப்புக்கள் ஏட்டில் உட்சேர்ப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள் ளது. | -மேற்படி- |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு இல்லை எனில் எவ்விதமான செலவிற்கோ அல்லது பொறுப்புக்கோ கடமைப்படலாகாததுடன் அதற்கான செலவானது ஒதுக்கீட்டினை விஞ்சுதல் | இந்தப் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பணவுறுதிப் பத்திரம் கிடைத்த போதே நிதிப்பிரமாணம் 69 இன் கீழ் ஒதுக்கீடு மாற்றம் செய்யும் இறுதித் திகதி கடந்து விட்டிருந்தமையால் ஒதுக்கீட்டினை | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு இல்லையெனில் எந்தவொரு செலவிற்கு அல்லது பொறுப்பிற்கு கடமைப்படலாகாது. |

| | |
|---|---|
| ஆகாது. மீளாய்வு ஆண்டில் அமைச்சினால் ஒதுக்கீட்டினை விஞ்சி ரூபா. 533,968 பெறுமதியான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | உருவாக்கிக் கொள்ளுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. அந்த செலவுகள் அறிந்து கொள்ளப்பட்டது 2020 ஆம் ஆண்டு கடந்த பின்னரே ஆகும். எவ்வாறாயினும் இந்த நிலையினைத் தவிர்த்துக் கொள்ளுவதற்கு முடிந்தளவு அனைத்து முயற்சிகளையும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2008 பெப்ரவரி 06 ஆம் திகதிய இலக்கம் 2008/05 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் குடிமகன்/வாடிக்கையாளர் சாகனம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 ஆம் ஆண்டுக்கு உரியதான அமைச்சினால் சுற்றறிக்கையின் பிரகாரம் குடிமகள் சாசனம் தயாரிக்கப்பட்டிருக்காதது டன் சேவை சாசனம் தயாரிக்கப்பட்டிருந்தது. | குடிமகன் வாடிக்கையாளர் சாசனம் அறிமுகப்படுத்தப்பட்ட 05/2008 மற்றும் 05/2008(1) ஆகிய சுற்றறிக்கைகளின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த படிவத்திற்கு அமைய குடிமகன் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குடிமகன் சாசனம் மற்றும் வாடிக்கையாளர் சாசனம் என்பன ஒரே விடயம் என கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவதானிப்புடன் இணங்க முடியவில்லை என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் பிரகாரம் குடிமகன; / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.4 வைப்பு மீதி

-----------------

வைப்பு மீதிகள் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சேவையில் ஈடுபட்டுள்ள போது ஊழியர்களுக்கு ஏற்படும் மரணம் அல்லாத ஆபத்து மற்றும் மரண ஆபத்து காரணமாக தொழில் வழங்கும் நிறுவனத்திடம் இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகம் அறவிட்ட நட்டஈட்டுத் தொகையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா. 6,837,248 மீதியொன்று தீர்க்கப்படாது காணப்பட்டது. ஏழியர்கள் மற்றும் அவர்களில் தங்கி வாழ்வோரது சரியான தகவல்கள் இல்லாமை, பயனாளிகளின் நட்டஈட்டுத் தொகையினை வழங்குவதற்கு உரியதான ஆவணங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றமை மற்றும் அவற்றை அலுவலகத்தில் சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களால் இந்த நட்டஈட்டுத் தொகையினை செலுத்த முடியாது இருந்ததுடன் அதன் தாமதக் காலமானது 05 மாதம் தொடக்கம் 04 வருடங்கள் வரையாக கால வீச்சினைக் கொண்டிருந்தது. | 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியில் மிகுதியாக இருந்த தொகை ரூபா. 4,279,719.21 ஆகும். விபத்தில் காயமடையும் ஊழியருக்கு உரித்தான நட்டஈட்டுத் தொகை அவரின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கின் தகவல்களைப் பெற்றுக் கொண்டு அந்த தொகையினை குறித்த கணக்கில் வரவு வைக்கப்புடும. இங்கு ஊழியர் வங்கிக் கணக்கு விபரங்களை சமர்ப்பிப்பதில் ஏற்படும் தாமதம் மற்றும் செயற்படாத வங்கிக் கணக்கினைச் சமர்ப்பித்தல்போன்றவற்றின் அடிப்படையில் நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதில் தாமதம் ஏற்படும் விபத்தில் மரணமடையும் ஊழியர்களின் நட்டஈட்டுத் தொகை, நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஒழுற்கு விதிகளின் கீழ் நீதிமன்ற பரீட்சிப்பின் மூலம் நட்டஈட்டினை பிரித்து வழங்கும் கட்டளையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்களது கணக்குகளில் வரவு வைக்கப்படும் இந்தப் பரீட்சிப்பிற்கு சமூகமளிக்காமை, தேவையான சட்ட | நட்டஈட்டு கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் விபத்துகளில் மரணமடையும் ஊழியர்களில் தங்கி வாழ்வோருக்கு உடனடியாக நிவாரணம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்காமை போன்ற காரணங்களின் அடிப்படையில் நட்டஈட்டுத் தொகையினை வழங்குவதில் கருத்திற் கொள்ளத்தக்க காலம் செலவிடப்படுவதால் தாமதம் ஏற்படுகின்றது. | |

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 நட்டங்கள் மற்றும் இழப்புகள்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 04 வாகன விபத்துக்கள் தொடர்பில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப்பிரமாண இலக்கம் 104 இன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை என்பது காணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்த 04 வாகன விபத்துகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந’த போதிலும் விசாரணை நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவில்லை என்பதனைக் கணக்காய்வு அவதானிப்புகளில் கண்டறிந்ததுடன் அது தொடர்பில் கணக்காய்விற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆந்த அவதானிப்பின் பின்னர் உடனடியாக விசாரணைக் குழுவினை மீண்டும் நியமிப்பதற்கு நடவடிக்கை உடுத்துள்ளதுடன் போக்குவரத்துத் தடை முடிவடைந்து இரு வாரங்களுக்குள் நிதிப்பிரமாணம் 104 இன் விசாரணையை முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. | வாகன விபத்து தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இல் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 நவம்பர் 07 ஆம் திகதி விபத்துக்குள்ளான இலக்கம் WPNC-6519 கொண்ட வான் தொடர்பில் அமைச்சின் நட்டஏட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | WPNC-6519 இலக்கம் கொண்ட வான் வண்டி தேசிய தொழில் ஆய்வு நிறுவனத்திற்குத் தற்காலிகமாக விடுக்கப்பட்டு இருக்கும் போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதுடன் அதற்குரிய நிதிப் பிரமாணம் 104 இன் விசாரணை முடிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தகவல்கள் அமைச்சின் நட்ட சேத ஏட்டில் உட் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான சந்தர்ப்பங்களில் சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் ஏடுகளை இற்றைப்படுத்தி பேணிச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------- | ----------------------- | ----------------- |
| (அ) | ரூபா 535,695 மொத்த செலவினைக் கொண்ட Sony HXR NX 5P வர்க்க வீடியோ கமெராவினை திருத்த வேலை செய்வதற்குத் தேவையான கொள்முதல் அனுமதியின்றி சிங்கப்பூரில் அமைந்துள்ள தாய் நிறுவனத்திடம் அனுப்பப்பட்டிருந்தது. பின்னர் அந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கொள்முதல் அனுமதி கிடைக்காத காரணத்தால் கெமெராவினை மீண்டும் இந்நாட்டிற்கு கொண்டு வர நேர்ந்திருந்தது. இதற்காக ரூபா. 15,000 போக்குவரத்து கட்டணம் செலுத்த வேண்டியிருந்ததுடன் இந்த வீடியோ கெமெராவின் திருத்த வேலைக்காக சிங்கப்பூர் தாய் | Sony HXR NX 5P வர்க்க வீடியோ கமெராவை சிங்ப்பூரில் அமைந்தள்ள தாய் நிறுவனத்திற்கு அனுப்பும் நிலை ஏற்பட்டுள்ளமை இலங்கையின் பிரதிநிதிக்கு அதனைக் காட்டி பரீட்சிப்பதற்கு மதிப்பீட்டினை பெற்றுக் கெடுப்பதற்கு முடியாது இருந்ததனால் ஆகும். அவ்வாறு சிங்கப்பூரின் தாய் நிறுவனத்திடம் அனுப்பி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா. 261,000 மதிப்பீட்டிற்கு அமைய அந்த கமெராவை திருத்தம் செய்யும் செலவாகக் கொள்வனவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததால் அது திருத்தல் செய்யப்படவில்லை. அதனால் போக்குவரத்துக் கட்டணமான ரூபா. 15,000 தொகையும் மட்டும் செலுத்த | அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவு தொடர்பாக வினைத்திறன் உற்பத்தித் திறன் மற்றும் சிக்கனம் என்பன போன்றவை தொடர்பில் கவனத்திற் கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தால் அனுப்பப்பட்ட ரூபா. 261,000 (கெமெராவின் தற்போதைய விலையின் 48 சதவீதம் அளவான) மதிப்பீடு 2019 திசெம்பர் 02 ஆம் திகதி கொள்முதல் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கமெராவானது 2021 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் அமைச்சிடம் திரும்ப கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | வேண்டிய ஏனைய கட்டணங்களையும் செலுத்தி கெமெராவினை மீண்டும் அமைச்சிற்கு பெற்றுக் கொள்ளுவதற்கு மேற்கூறிய செலவினை மேற்கொள்ள கொள்முதல் குழு அனுமதி பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அந்த அனுமதியினைப் பெற்றுக் கொண்டவுடன் கெமெராவை மீண்டும் அமைச்சிடம் கொண்டு வருதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் கீழ் ஜுலை வேலைநிறுத்தம் செய்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முன்மொழிவினை செயற்படுத்துவதற்கு 2016 ஒகஸ்ட் 18 ஆம் திகதி தேசிய வரவு செலவு பணியாளரின் இலக்கம் BD/GPS/JS/2/14-2015 கொண்ட கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்து விண்ணப்பங்களை பரிந்துரை செய்வதற்காக முறையான செயற்பாட்டினைத் தயாரித்திருக்கவில்லை அதன் காரயமாக ஓய்வூதியம் பெறும் நபர்களின் விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்வதில் பலன்களைப் பெற்ற நபர்களின் விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்தல், ஏற்றுக் கொள்ள முடியாத பிரமாணப் பத்திரத்துடன் விண்ணப்பப் படிவத்தை பரிந்துரை செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2020 திசெம்பர் மாதம் வரையிலும் இந்த செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஓரே நபரின் விண்ணப்பத்தினை இரு | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டள்ளவாறு ஓரே பயனாளிக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் விண்ணப்பம் பரிந்துரை செய்யப்பட்டு வரவு செலவுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தால் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா. 1,000,000 (ரூபா. 250,000 x 4) தொகையினை குறித்த பயனாளிகளிடம் இருந்து மீண்டும் அறவிட்டுக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு தேசிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு தெரிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பில் உரிய பயனாளிகளுக்க காரணங்களை மறைத்து இவ்வாறு இரு தடவைகள் கொடுப்பனவைப் பெற்றுக் கொண்டுள்ளனர் என்பதற்கும் மற்றும் அவ்வாறு ஆவணங்களை சமர்ப்பித்ததில் சிந்தித்தோ அல்லது அறியாமையாலோ அரச நிதியினை துஷ்பிரயோகம் செய்வதற்கு உடன்பட்டு உள்ளமைளைத் தெரிவித்து தாமதமின்றி குறித்த தொகையினைச் செலுத்துமாறு கடிதம் மூலம் தெரிவிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஜுலை வேலை நிறுத்தம் செய்தவருக்கான கொடுப்பனவினை பரிந்துரை செய்கையில் வரவு செலவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த அறிவரைகளைப் பின்பற்றி பலன் பெறுவோர் தொடர்பாக மிகச் சரியான தகவல்களின் அடிப்படையில் பரிந்துரைகளை வழங்குதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தடவைகள் பரிந்துரை செய்தததனால் 4 பேருக்கு ரூபா. 1,000,000 அதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது. | அவ்வாறே, கணக்காய்வு விசாரணையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதிருக்க தேவையான நடவடிக்கைகளை 2020 ஒக்டோபர் 12 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் உரிய விடய உத்தியொகத்தர்கள் மற்றும் கண்காணிப்பு உத்தியோகத்தர்களையும் அறியப்படுத்தப்பட்டுள்ளனர். | |
| (இ) | 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரையிலும் 3 போட்டிகளுக்காக ரூபா 59.1 மில்லியன் செலவிடப்பட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலாளர் அலுவலகத்தின் பிரதான நோக்கமான உற்பத்தித் திறன் போட்டி மற்றும் விருது வழங்கல் விழா நடாத்தல் மற்றும் நிறுவனங்களைத் தெரிவு செய்த விருது வழங்கல் போன்ற காரணிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலம் விருது பெற்ற நிறுவனங்கள் அந்த நிலையினைத் தொடர்ந்தும் பேணிச் செல்வது தொடர்பில் தொடர் நடவடிக்கை செய்யும் முறைமை மீளாய்வு ஆண்டு அறுதி வரையிலும் மேற்கொள்ளப்படவில்லை. | தெசிய உற்பத்தித் திறன் விருது போட்டிகளில் விரத வென்ற நிறுவனங்கள் உற்பத்தி திறன் கருதகோளினை தொடர்ச்சியாக பேணிச்செல்லுதல் தொடர்பில் கண்காணிப்ப செய்வதற்கு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் திட்டமிடப்பட்டு உள்ளது. அந்த நிறுவனங்களின் உற்பத்தித் திறனை 06 மாதங்களுக்கு ஒரு தடவை எமது பிரதேச மட்ட உத்தியோகத்தர் மூலம் அவதானிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பிரதேச உத்தியொகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டு உள்ளதுடன் 2020 உற்பத்தித் திறன் விருது வழங்கல் விழா முடிவடைந்த பின்னர் நிறுவனங்களை அவதானித்தல் அந்த உத்தியோகத்தர்களின் வருடாந்த நோக்கங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | விருது பெற்றுக்கொண்ட நிறுவனங்களில் உற்பத்தித் திறனை தொடர்ந்தும் பேணுவதற்குத் தொடர் நடவடிக்கை முறைமையினைச் செயற்படுத்துவதும் அவசியமாகும். |
| (ஈ) | அமைச்சுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களின் மூலம் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் ஓரே காலப்பகுதியில் ஒரு மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் ஊழியர் குழுவினருக்கு அதிக வினைத்திறனான சேவையினை நோக்காகக் | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்ளுகையில் தோடடப்புற மக்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி உள்ளதுடன், அநாவசியமாக நேரம் மற்றும் பண விரயங்கமும் ஏற்படுகின்றது. இந்த சிக்கல் | இலக்குகளுக்கு அமைய அனைத்து மாவட்டங்களும் அடங்கும் வகையில் நடமாடும் சேவை நடாத்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| கொண்ட நடமாடும் சேவை வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஆயினும், கடந்த 05 வருட தகவல்களின் பகுப்பாய்வில் அவதானிக்கப்பட்டதாவது நடமாடும் சேவை பதளை மாவட்டத்தில் 04 தடவைகள், இரத்தினபுரி மாவட்டத்தில் 03 தடவைகள் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் 01 தடவை எனும் வகையில் நடாத்தப்பட்டிருந்தது. எனினும் ஏனைய மாவட்டங்களில் நடமாடும் சேவை நடாத்தப்படாமைக்கான காரணங்கள் மற்றும் பதுளை மற்றும் அரத்தினபுரி மாவட்டங்களில் நடமாடும் சேவையை அதிகளவில் நடாத்துவதற்குரிய மூலப்பிரமாணங்கள் தொடர்பில் கணக்காய்விற்கு காரணிகள் வெளிப்படுத்தப்படவில்லை. | அதிகளவில் காபணப்படும். தோட்டப்புற மக்கள் அதிகளவில் வாழும் பிரதேசங்களில் நடமாடும் சேவை வேலைத்திட்டங்களை நடாத்த நோக்காகக் கொள்ளப்பட்டது அந்த தோட்டப்புற மக்களுக்கு ஏற்படும் வசதியீனங்களைத் தவிர்ப்பதற்கே ஆகும். பிரதேச செயலாளர் அலுவலக மட்டத்தில் மாவட்டத்தினுள் இந்த வேலைத் திட்டங்களை நடாத்துவதன் மூலம் மிக அதிக பலன்களைக் கைப்பற்றக்கூடியதாக இருக்கும் என்பது அவதானிக்கப்பட்டதனால் இவ்வாறு ஓரே மாவட்டத்தில் பல நடமாடும் சேவை வேலைத் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இவ்வாறு நடாத்தப்பட்ட போதிலும் இன்னமும் அந்த பிரதேசங்களில் இந்த சிக்கல்கள் காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. |

## 4. நல்லாளுகை

------------------------

### 4.1 மக்களுக்கான சேவையை நிறைவேற்றுதல்

-----------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ----------------------------------- | ------------------------ | ------------------ |
| (அ) | இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாமையால் எழுத்தாணை பிறப்பிக்கப்பட்டுள்ள 08 நீதிமன்றங்களில 48 வழக்குகள் காணப்படுவதுடன் விபத்து அறிக்கையிடப்பட்ட திகதி தொடக்கம் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 04 வருடங்கள் | தொழிலாளர் இழப்பீட்டு நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் 30 நாட்களுக்குள் நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படாதவிடத்து தொழில் வழங்குனரின் அசையும் சொத்துக்களைத் தடை செய்து ஏலமிடப்பட்டு அந்தத் தொகையினை அறவிடுவதற்கு தொழில் | இழப்பீட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதியினை உடனடியாக பயனாளிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கம் 24 வருடங்கள் வரையான கால வீச்சில் அறவிடப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகை ரூபா. 12,988,494 என்பது அவதானிக்கப்பட்டது. | வழங்குனர் வசிக்கும் பிரதேசத்துக்குரிய நீதவான் நீதிமன்ற பதிவாளருக்கு எழுத்தாணை வழங்கப்படும். அதற்கமைய, இந்த எழுத்தாணையை செயற்படுத்த செல்லுகையில் பிரதிவாதியினால் நட்டஈட்டுத் தொகையினை செலுத்துவதற்கு நீதவான் நீதிமன்ற பதிவாளரிடம் கால அவகாசம் பெற்றுக் கொண்டுள்ளமையால் அநேக பிரதிவாதிகளின் சொத்துக்கள் தடை செய்யப்பட்ட பின்னர் அந்த சொத்துக்கள் தமக்குச் சொந்தமான சொத்தல்ல என உரிமை வழக்கு தொடுக்கப்பட்ட காரணத்தால் அந்த வழக்கு முடிவுறும் வரையில் ஏலமிடுவதற்கு முடியாததனால் அறவிடுதலில் தாமதம் ஏற்படும். சிவில் நீதிமன்ற செயற்பாடுகளின் படி அந்த எழுத்தாணையை செயற்படுத்துவதற்காக நட்டஈட்டு உரிமையாளர்கள் நீதிமன்ற பதிவாளரை அணுகி தேவையான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும். இது தொடர்பில் முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அவர்கள் அறிவுறுத்தப்பட்ட போதிலும் அதற்காக முன்வராததினால் அந்த எழுத்தாணையை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் முடியாது போயுள்ளது. | |
| (ஆ) | இழப்பீட்டு ஆணையாளர் அலுவலகத்தில் நட்டஈட்டுத் தொகை வைப்பிலிடப்பட்ட போதிலும் தங்கி வாழ்வோரைக் கண்டறிய முடியாத காரணத்தால் நட்டஈட்டுத் தொகையினை பிரித்து வழங்காது தேசிய சேமிப்பு வங்கியில் தொழில் இழப்பீட்டு ஆணையாளரின் | நீண்ட நாட்களாக இழப்பீட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் அவர்களது நட்டஈட்டுத் தொகைக்கான பலனைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் தொழில் நட்டஈட்டு ஆணையாளரின் பெயரில் சேமிப்புக் கணக்கில் அந்த | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பெயரில் வேவ்வேறாக 6 கணக்குகள் பேணப்பட்டு வந்கள்ளதுடன் அவற்றில் வைப்பிப்பட்டிருந்த தொகை 2020 திசெம்பர் 31 அம் திகதியில் ரூபா. 2,023,095 என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | தொகையானது வைப்பிடப்பட்டிருந்ததடன் மீளச் செலுத்துகையில் அதன் வட்டியுடன் சேர்த்து நட்டஈட்டுப் பயனாளிகளுக்குசெலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில் இழப்பீட்டு ஆணையாளரின் பெயரில் காணப்படும் 06 சேமிப்புக் கணக்குகளில் ஒரு கணக்கு இது வரையிலும் நட்டஈட்டு உரிமையாளருக்கு வழங்கவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | வேலையில் ஈடுபட்டுள்ள போதே ஏற்படும் மரண விபத்த காரணமாக மரணமடைந் ஊழியர்களுள் பராயமடையாதவர்களுக்கு உரித்துடைய நட்டஈட்டு தொகையானது வயது பூரணமடைந்ததன் பின்னர் அந்தந் தொகையானது அவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான வயது பூரணமடைந்தும்பிரதி பலன்கள் விடுவழக்கப்படாத 534 கணக்குகள் காணப்பட்டதுடன் அந்த நட்டஈட்டுத் தொகையின் பெறுமதி ரூபா. 20,861,229 ஆகும். அதனுள் ரூபா. 11,782,761 தொகையானது 2016 ஆம் ஆண்டில் பூரணமடைந்த 459 கணக்குகளும் ரூபா. 8,563,187 தொகையானது 2020 ஆம் ஆண்டில் பூரணமடைந்த 66 கணக்குகளும் உள்ளடங்கும். | பராயமடையாதோருக்கு உரித்தடைய நட்டஈட்டுத் தொகை அவர்களது வயது பூரயமடையும் வரையிலும் தொழில் நட்டஈட்டு ஆணையாளர் பெயரில் தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்படும். அவ்வாறு வைப்பிலிடப்பட்ட ஆயினும் கணக்கு உரிமையாளரைக் கண்டு பிடிக்க முடியாத காரணத்தால் அங்கு குறிப்பிட்டுள்ள பயனாளிக்கு நட்டஈட்டுத் தொகையினை விடுவிக்க முடியாது உள்ளது. பழைய கக்கின் நிலுவைகள் மீதியாவதற்க காரணமாக உள்ள 5 காரணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.<br><br>விடுவிக்கப்படாத நட்டஈட்டு தொகையினை விடுவித்துக் கொள்வதற்காக 2021 மார்ச் 29 ஆம் திகதி இடம்பெற்ற கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டத்தில் நீண்ட நேரக் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்பட்டது. அதற்காக அமைச்சின் மூலம் குழுவொன்று அமைக்கப்பட்டு மேலும் தகவல்களைத் தேடிக் கண்டறிவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அவ்வாறே, எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை | பராயமடையாதோருக்க உரித்தடைய நட்டஈட்டு தொகையினை வயது பூரணமடைந்த பராயமடையாதோருக்க உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஏற்படாதிருப்பதற்கான அனைத்தத் தகவல்களையும் (பெற்றோர், பாதுகாவலர் மற்றும் சகோதரர் தொடர்பான விபரங்கள்) ஓரே பக்கத்தில் அமையும் வகையிலான முறைமையினை அறிமுகப்படுத்துவதற்க யோசனை தெரிவித்திருந்ததடன் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளும் குறிப்பிடப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக 2018 ஓக்டோபர் 06 ஆம் திகதி தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் முறையே சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

2016 மார்ச் மாதம் தொடக்கம் பராயமடையாதோர் கணக்குகளின் கணிணி தரவு ஓழுங்கமைப்பினை ஆரம்பித்து அதில் அது வரையிலும் விடுவிக்கப்படாத அனைத்த பராயமடையாதோர் கணக்கு விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த தரவு ஓழுங்கமைப்பிற்கு இணங்க 18 வயது பூர்த்தியடைந்த உடன் அவர்களுக்க அது தொடர்பில் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு உரிய காலப்பகுதியில் கணக்கினை விடுவிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும் இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டின் பின்னர் வயது பூர்த்தியடைந்தும் விடுவிக்கப்படாத கணக்ககளின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவே ஆகும்.

## 5. மனிதவள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான, வெற்றிடம் மற்றும் மேலதிக பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. | சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரங்களுக்குரிய ஆட்சேர்ப்புகள் இந்த அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படாத, அமைச்சின் நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட காரணி ஆகும். அதனால், அந்த வெற்றிடத்தினை நிரப்புவதற்கு ஏற்றதாக அமைச்சினால் மேற்கொள்ளப்படக்கூடிய செயலானது, அதாவது உரிய நிறுவனத்திற்கு வெற்றிடத்தை நிரப்புமாறு தெரிவித்தலை மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிப் பயிலுனர் போதியளவு எண்ணிக்கையானோர் இந்த அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளதனால் இரண்டாம் நிலை வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மேலும், முதன்மை நிலை மட்டங்களின் அனைத்து சேவைத் தொகுதிகளுக்கும் உரிய புதிய ஆட்சேர்ப்புகள் ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதனால் | எதிர்பார்க்கப்பட்ட கடமைகளை மிகவும் வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு ஏற்ற வகையில் மனித வளங்களை உகந்த முறையிலும் மற்றும் வினைத்திறனாகவும் பேணிச் செல்லுவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| சேவை வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| I. சிரேஷ்ட நிலை | 23 | 15 | 08 |
| II. மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| III. இரண்டாம் நிலை | 75 | 47 | 28 |
| IV. முதன்மை நிலை | 34 | 27 | 07 |
| V. வேறு (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 02 | 01 | 01 |
| **மொத்தம்** | **138** | **93** | **45** |

நிரப்புவதற்கு இது வரையிலும் முடியாது காணப்படுகின்றது. அது தொடர்பிலான விபரங்கள் பல்நோக்கு அபிவிருத்தி செயலணிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**1.6.5 2020 ஆம் ஆண்டுக்கான செலவின அறிக்கை சமர்ப்பித்தல்**

2020 ஒகஸ்ட் 08 அம் திகதி அதிமேதகு ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் 193 ஆம் தலைப்பில் தொழில் அமைச்சு ஆரம்பமாகியது மேற்கூறிய அறிவுரைகளின் படி 2020 ஜனவரி மாதம் தொடக்கம் 2020 ஒகஸ்ட் 31 ஆம் திகதி வரை அது வரையிலும் காணப்பட்ட தலைப்பு இலக்கம் 054 அமைச்சின் 089 செலவின விடயங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்த ரூபா 388.8 மில்லியன் மொத்த செலவினம், தலைப்பு இலக்கம் 193 அமைச்சின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சிற்காக திறைசேரியின் கட்டுநிதி பெறுவனவு மற்றும் தீர்த்தல் முன்னாள் அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு இலக்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தக் கட்டுப்பணக் கணக்கு இலக்கத்தின் கீழ் திறைசேரியின் கட்டுநிதி பெறுகை ரூபா 628.5 மில்லியனாகத் திறைசேரி கட்டுநிதிக் கணக்குக் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்த அமைச்சின் (தலைப்பு இலக்கம் 193) நடவடிக்கைகள் 2020 செப்டெம்பர் 01 ஆம் திகதி தொடக்கமே செயற்படுத்தப்பட்டதனால் அந்த திகதி தொடக்கம் ஆண்டு இறுதி வரையிலும் திறைசேரியின் கட்டுநிதியாக ரூபா. 241.7 மில்லியன் கிடைத்திருந்ததுடன், அதில் ரூபா. 30.6 மில்லியன் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் பணமாக திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருந்தது.